بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுமுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 02/07/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்றைய நாட்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பு கூறப்பட்டு வருகின்றது. அது குறித்தே இன்றும் கூறுவேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: கிறித்தவர்கள் மற்றும் யூதர்களின் கைவசம் இருந்த ஏமனின் நிலத்திற்கு, விதிமுறைப்படி அரசாங்கமே உரிமை கொண்டதாக இருந்தது. ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அம்மக்களை அரேபியாவிலிருந்து வெளியேற்றுகையில் அவர்களிடம் இருந்து அந்த நிலத்தைப் பறித்துக் கொள்ளாமல் விலைக்கு வாங்கினார்கள்.

புகாரியின் தெளிவுரையான ஃபத்ஹுல் பாரியில் எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நஜ்ரானைச் சேர்ந்த இணைவைப்பாளர்கள், யூதர்கள் மற்றும் கிறித்தவர்களை நாடு கடத்தினார்கள். அவர்களுடைய நிலங்களையும் தோட்டங்களையும் விலைக்கு வாங்கிக் கொண்டார்கள்.

**இஸ்லாத்தில் போர்க் கைதிகளைத் தவிர, வேறு எவரையும் அடிமையாக ஆக்குவது தடை செய்யப்பட்டிருப்பது பற்றி எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:-**

அல்லாஹுத்தஆலா கூறுகிறான்: முஸ்லிம்களே! நீங்கள் மற்ற மக்களைப் போன்று பிற சமுதாய மக்களைப் பிடித்து, உங்களுடைய ஆற்றலை அதிகரித்துக் கொள்ள விரும்புகிறீர்களா? அல்லாஹ் இதை விரும்பவில்லை. மாறாக, உங்களுடைய முடிவைப் பொருத்தவரை, உங்களுக்குச் சிறந்தவையாக இருக்கக்கூடிய கட்டளைகளின்படி உங்களைச் செலுத்த வேண்டும் என அவன் நாடுகிறான். ஆக, நீங்கள் போரின் போது கைது செய்யப்பட்ட போர் கைதிகளைத் தவிர, வேறு எவரையும் கைதிகள் ஆக்காதீர்கள்.

இந்தக் கட்டளையின்படி இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் வன்மையாக செயல்படுத்தப்பட்டு வந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் ஏமனிலிருந்து ஒரு குழு வந்தது. அந்தக் குழு, இஸ்லாத்திற்கு முன்பு கிறித்தவர்கள் தம்மை வெறுமனே அடிமையாக்கி விட்டதாக முறையிட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'நான் இது குறித்து ஆராய்வேன்' என்று கூறினார்கள். இதற்கு நேர்மாறாக ஐரோப்பாவில் 19ஆம் நூற்றாண்டு வரை அடிமைப் படுத்துவதை தொடர்ந்து வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தின் போது, ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டில் மதீனா மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. மழை பெய்யாத காரணத்தினால் நிலம் முழுவதும் கருஞ்சாம்பல் போன்று ஆகி விட்டது. இந்த நிலை 9 மாதங்கள் வரை இருந்தது. அந்த வருடம் 'ஆமுர் ரிமாதா' அதாவது, சாம்பல் வருடம் என்று அழைக்கப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எகிப்தின் ஆளுனரான ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு உதவிக்காக கடிதம் அனுப்பினார்கள். அதற்கு ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் உணவு

தானியங்கள் அடங்கிய **1000** ஒட்டகங்களை அனுப்பினார்கள். அது போக நெய் மற்றும் துணிமணிகள் இருந்தன. ஈராக்கின் ஆளுனர் ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் **3000** ஒட்டகங்களை உணவு தானியங்களுடன் அனுப்பி வைத்தார்கள். அவற்றை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிராமப்புறங்களுக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள்.

இந்தக் கடுமையான நாட்களில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம்முடைய மேற்பார்வையில் உணவு தயார் செய்ய வைத்து, மக்களுடன் சேர்ந்து உண்டு வந்தார்கள். அன்னார் தொடர்ந்து நோன்பு நோற்று வந்தார்கள். ஒருநாள் ஒட்டகங்கள் அறுக்கப்பட்டன. மாலை நேரத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன் திமில் மற்றும் ஈரலின் துண்டுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அன்னார் 'இவை எங்கிருந்து வந்தன?' என்று கேட்டார்கள். இவை இன்று அறுக்கப்பட்ட ஒட்டகங்களிலிருந்து கொண்டு வரப்பட்டது என்று கூறப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: 'அந்தோ! நல்ல பகுதியை எனக்காக வைத்துக் கொண்டு, மற்ற பகுதியை மக்களுக்கு உண்ணக் கொடுத்தால் நான் எத்தகைய தீய கண்காணிப்பாளனாக இருப்பேன்.'

பஞ்சத்தின் நாட்களில் அன்னார் (ரலி) இஷா தொழுகைக்கு பிறகிலிருந்து இரவின் இறுதிப் பகுதி வரை தொடர்ந்து தொழுது கொண்டிருப்பார்கள். பிறகு மதீனாவின் சுற்றுப் புறங்களில் வலம் வருவார்கள். அன்னார் அல்லாஹ்விடம், 'அல்லாஹ்வே! என்னுடைய கைகளால் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சமுதாயத்தை அழிவிற்குள்ளாக்கி விடாதே!' என்று துஆ செய்வார்கள்.

இப்னு தாவூஸ் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்கள் செழிப்படையாத வரை, இறைச்சியையும் உண்ணவில்லை; நெய்யையும் உண்ணவில்லை.

அய்யாஸ் பின் கலீஃபா கூறுகிறார்கள்: பஞ்சம் ஏற்பட்ட ஆண்டில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய நிறம் கருமை ஆகிவிட்டிருந்தது. 'ஒருவேளை அல்லாஹ் பஞ்சத்தை போக்கவில்லை எனில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிம்கள் மீதான கவலையில் மரணித்து விடுவார்கள்' என்று மக்கள் கூறினார்கள்.

மதீனாவின் அனைத்து பகுதிகளிலும் காட்டரபி மக்கள் வந்திருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பல்வேறு சஹாபிகளின் வாயிலாக அவர்களைக் கணக்கெடுக்கச் செய்தார்கள். அவர்கள் அனைவருக்கும் உணவிற்கான ஏற்பாடு செய்தார்கள். பஞ்சத்தின் இந்த நாட்கள் தனது எல்லையை அடைந்து விட்ட போது, ஒரு நபர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் துஆவின் பால் கவனமூட்டுவதாகக் கனவு கண்டார்கள். ஆக, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப மழை வேண்டி தொழப்படும் தொழுகை தொழப்பட்டது. அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: தொழுகையை நிறைவேற்றி விட்டு அன்னார் வீட்டுக்குக்கூட சென்று சேர்ந்திருக்கவில்லை; அதற்குள் அந்த மைதானம் மழையால் குளமாகிவிட்டது.

நபவி பள்ளிவாசலில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலக்கட்டத்தில் முதன்முறையாக பாய்கள் விரிக்கப்பட்டன. அன்னாருடைய கிலாஃபத் காலகட்டத்தில், ஹிஜ்ரி **17** ஆம் ஆண்டில், நபவி பள்ளிவாசல் விரிவாக்கம் செய்யப்பட்டது. அந்த விரிவாக்கப் பணியில் சிக்கனமான முறையில் செயல்பட்டவாறு, பள்ளிவாசல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்தில் இருந்த முறைப்படி அமைக்கப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலக்கட்டத்தில், மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆரம்பமானது. அதே போன்று உணவுப் பொருட்களை வழங்குவதற்காக ரேஷன் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

**இஸ்லாமிய ஆட்சியில் ஆட்சிமுறை எவ்வாறு இருந்தது என்பது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வந்து முதலாவது பணியாக, சொத்துடையவர்களை சொத்து இல்லாதவர்களுடைய சகோதரர்கள் ஆக்கிவிட்டார்கள்.

அன்ஸார் மற்றும் முஹாஜிர்களுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட சகோதரத்துவ பந்தம், இஸ்லாமிய சமத்துவத்துக்கு முதல் உதாரணமாகும். அதேபோன்று ஒரு போரின்போதும்

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அனைவருக்கும் நியாயமான முறையில் உணவு கிடைக்க வேண்டும் என்பதற்காக ரேஷன் முறையை நடைமுறைப்படுத்தி பொருட்களை பகிர்ந்தளித்தார்கள். பஹ்ரைனுடைய மன்னர் முஸ்லிம் ஆனதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவருக்கு, 'உங்களது நாட்டில் எந்த மக்களிடம் வாழ்க்கையை கழிப்பதற்காக எவ்வித நிலமும் இல்லையோ, அவர்கள் பசியுடனும் நிர்வாணமாகவும் இல்லாமல் இருப்பதற்காக நீங்கள் அவர்களுக்கு நான்கு திர்ஹமும், ஆடைகளும் கொடுங்கள்' என்று வழிகாட்டினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய வஃபாத்திற்குப் பிறகு, முஸ்லிம்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் பரவியதும் அவர்களுக்கான உணவிற்கான ஏற்பாடு கடினமாகிவிட்டது.

இந்நிலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அனைவருடைய மக்கள்தொகை கணக்கீட்டை எடுக்க வைத்தார்கள். மேலும், ரேஷன் முறையை ஏற்படுத்தி விட்டார்கள். அன்னார் இந்த மக்கள்தொகை கணக்கீட்டை, பொது மக்களிடமிருந்து செல்வங்களைப் பறித்துக் கொள்வதற்காக அல்ல; மாறாக, அவர்களுக்கு உணவுப் பொருட்களுக்கான ஏற்பாடு செய்வதற்காக எடுக்கவைத்தார்கள். உலகம் முழுவதிலும் உள்ள அரசாங்கங்கள் மக்கள் பலியாடாக ஆக வேண்டும் என்பதற்காகவும் இராணுவத்தில் சேர்ந்து தொண்டாற்ற வேண்டும் என்பதற்காகவுமே மக்கள் தொகை கணக்கீட்டை எடுக்கிறார்கள்.

ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு உணவிற்கான ஏற்பாடு ஆக வேண்டும் என்பதற்காக மக்கள்தொகை கணக்கீட்டை எடுக்க வைத்தார்கள். மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இஸ்லாத்தில் மேற்கொள்ளப்பட்ட முதல் நடவடிக்கை இதுவாகும். இந்த அமைப்பு ஏற்பட்டுவிட்டது என்றால், பிறகு வேறு எந்த அமைப்பின் அவசியமும் இருக்காது. ஏனென்றால், நாடு முழுவதுக்குமான தேவைகளின் பொறுப்பாளியாக அரசாங்கம் ஆகிவிடுகிறது. இன்றைய நாட்களில் சோவியத் ரஷ்யா ஏழைகளுக்கு உணவு மற்றும் உடைக்கான ஏற்பாட்டைச் செய்தது என்று கூறப்படுகின்றது. ஆனால், முதன்முதலில் இவ்வாறான பொருளாதார அமைப்பை இஸ்லாம் தான் ஆரம்பித்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் எல்லா கிராமங்களிலும், எல்லா சிறு நகரங்களிலும், எல்லா நகரங்களிலும் வசிக்கும் மக்களுடைய பெயர்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டன. இஸ்லாத்தைப் பொருத்தவரையில், ஒவ்வொரு நபருடைய உணவு, உறைவிடம் மற்றும் உடைக்கான பொறுப்பாளி அரசாங்கமாகும். தற்போது மற்ற அரசாங்கங்களும் இதனைப் பின்பற்றுகின்றார்கள். காப்பீடு மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகியவை இதன் பல்வேறு வடிவங்கள் ஆகும். ஆனால், இளமை மற்றும் முதுமை ஆகிய இரண்டிலும் உணவு மற்றும் உடைக்கான பொறுப்பாளி அரசாங்கமாகும். இந்த அடிப்படை விதியை இஸ்லாத்திற்கு முன்பாக வேறு எந்த மார்க்கமும் முன்வைக்கவில்லை.

ஹிஜ்ரி 20 ஆம் ஆண்டில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நிர்வாக விஷயங்களில் எளிமை ஏற்படுவதற்காக, கைப்பற்றப்பட்ட நாடுகளை 8 மாநிலங்களாக பிரித்தார்கள். அதேபோன்று அன்னாருடைய காலத்தில் ஷூரா - ஆலோசனை கூட்டமும் நிறுவப்பட்டது. ஆலோசனைக் கூட்டத்தில் அன்ஸார் மற்றும் முஹாஜிர்களிலிருந்து பெரும் சஹாபாக்கள் இருந்தார்கள். தினசரி விவகாரங்களில் இந்த கூட்டத்தின் தீர்மானங்கள் போதுமானவையாகக் கருதப்பட்டன. ஆனால், ஏதேனும் முக்கிய விவகாரம் முன்வந்தால் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாருடைய பொதுக்கூட்டம் நடைபெறும். மேலும், ஒருமித்த கருத்துடன் அவ்விஷயம் முடிவெடுக்கப்படும். இது போக மற்றுமொரு சபையும் இருந்தது. அங்கு தினசரி ஏற்பாடுகள் மற்றும் தேவைகள் பற்றி பேசப்பட்டது. இந்த சபை எப்போதும் மஸ்ஜிதே நபவியில் கூடிவந்தது. மேலும், முஹாஜிர் ஸஹாபிகள் மட்டுமே இதில் கலந்து கொள்வார்கள். மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களின் அதிகாரிகள் பெரும்பாலும் பொதுமக்களுடைய விருப்பத்திற்கேற்பவும் சில நேரங்களில் தேர்தல் மூலமாகவும் நியமனம் செய்யப்பட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொறுப்பாளர்களுக்கு, 'மக்கள் உங்களைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதற்காக மக்களுக்கு இமாமாக நியமிக்கப்பட்டு நீங்கள் அனுப்பப்படுகின்றீர்கள். முஸ்லிம்களுடைய உரிமைகளை செலுத்துங்கள். அவர்களை

கஷ்டப்படுத்தாதீர்கள். வீணாக எவரையும் புகழ வேண்டாம். அதனால் அவர்கள் குழப்பத்தில் சிக்க வாய்ப்புண்டு' என்று அறிவுரை கூறி வந்தார்கள். பொறுப்பாளர்களிடம், 'அவர் துருக்கியின் குதிரைகளில் சவாரி செய்யக்கூடாது. மெல்லிய உடையை அணிய கூடாது. சலித்த மாவினை உண்ணக்கூடாது. வாசலில் காவலரை நியமிக்கக் கூடாது' என்று வாக்குறுதி பெறப்பட்டது. பொறுப்பாளர்கள் உடைய செல்வம் மற்றும் சொத்துக்கள் சோதனை செய்யப்பட்டு வந்தன. ஒருவேளை அவர்களில் எவராலும் (உரிய கணக்கை காட்டி) திருப்திபடுத்த முடியவில்லை எனில் அதற்காக தண்டிக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஈராக் மற்றும் சிரியாவை வெற்றி கொண்ட பிறகு, வரி விதிப்பின் மீது கவனம் செலுத்தினார்கள். மன்னர்கள் வலுக்கட்டாயமாகப் பறித்து, அரசவையிலிருப்பவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் வழங்கியிருந்த நிலங்களை அன்னார் உள்ளூர் மக்களுக்குத் திரும்ப கொடுத்தார்கள். அதேபோன்று வரிவிதிப்பை முறைப்படுத்தி வசூலிப்பு முறை மிகவும் மென்மையானதாக ஆக்கப்பட்டது. அன்னார் முஸ்லிம் அல்லாது பொதுமக்களிடம் ஆலோசனை கேட்டு, அவர்களின் ஆலோசனைகளைக் கருத்தில் கொள்வார்கள்.

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய நற்குறிப்பு இனிவரும் நாட்களில் தொடரும் என்று கூறிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஒரு வலை தளத்தைத் துவங்குவதற்கான அறிவிப்பு செய்தார்கள்.*

**www.ahmadipedia.org** இந்த வலைதளத்தைத் **central Ahmadiyya Archive** மற்றும் **Research Center** உருவாக்கியது. அதில் ஒரு ஸர்ச் இன்ஜின் வடிவில் ஜமாஅத்தின் நூல்கள், சான்றோர்கள், சம்பவங்கள், கொள்கைகள் மற்றும் நிர்வாகம் தொடர்பாகக் கருத்துகளைத் தேட முடியும். ஒவ்வொரு என்ட்ரியுடனும் சம்பந்தப்பட்ட வலைதளங்கள், வீடியோக்கள் மற்றும் ஜமாஅத்தின் செய்தித்தாள்களிலிருந்து கட்டுரைகளுடைய லிங்க் வழங்கப்பட்டுள்ளன. உலகம் முழுவதிலும் பரவி இருக்கின்ற ஜமாஅத் மக்களிடம் மிகப் பயனுள்ள தகவல்கள் இருக்கின்றன. அவை எங்கும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த வலைதளத்தில் கன்ட்ரிபியூட் எனும் ஒரு ஆப்ஷன் வழங்கப்பட்டிருக்கின்றது. அங்கு அவர்கள் எந்த ஒரு தலைப்பு பற்றிய தமது தகவல்கள் அல்லது ஆதாரங்கள் அல்லது ஆவணங்கள் ஆகியவற்றை வழங்க முடியும். இவ்வாறு வழங்கப்பட்ட கருத்துக்கள் ஆராய்ந்து மற்றும் ஒப்புதல் வழங்கப்பட்ட பிறகு அது தொடர்பான தலைப்பின் என்டிரியில் இணைக்கப்படும்.

இந்த வலைதளத்தை உருவாக்குவதில் டெக்னிக்கல் விவகாரங்களைத் தலைமையக ஐ.டி. துறையின் நிரந்தர பணியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் மிகச் சிறப்பான முறையில் செய்துள்ளார்கள். இத்தனைக்கும் கருத்துக்களைத் திரட்டுவதில், கருத்துக்களைப் பெறுவதிலிருந்து மொழிபெயர்ப்பு மற்றும் பதிவேற்றம் வரை எல்லா படித்தரங்களிலும் **Archive** துறையின் முரப்பிகள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் கடின உழைப்புடன் செயல் ஆற்றியுள்ளார்கள். அல்லாஹுத்தஆலா அவர்கள் அனைவருக்கும் நற்கூலியை வழங்குவானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு, நான் இந்த வலைதளத்தைத் துவக்கி வைப்பேன். இன்ஷா அல்லாஹ்!*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رحمکم اللّٰہ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி முஹம்மது சுல்தான் மைதீன்)**